□□□□□□□□□□□□ □□□□□: 45 □□□□ □□□□□: 2□□□□□ □□□□□□□□□ 2013

வறுமையை குறைக்கும் வளர்ச்சிக்கான வழிகள்

– ஜோமோ குவாம் சுந்தரம், அனீல் சவுத்ரி

நாட்டின் வளர்ச்சிக்கு ஆதரவாக வாதாடு பவர்களில் பலரும், வறுமையை குறைக்க நீடித்த பொருளாதார வளர்ச்சி அவசியம் என்று வலி யுறுத்தி வருகின்றனர். 1990களில் வெளியிடப்பட்ட உலக வங்கி ஆராய்ச்சி அறிக்கையிலும் இந்த கருத்து ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டிருந்தது. அந்த ஆராய்ச்சி அறிக்கையில், "வளர்ச்சி ஏழை களுக்கு நல்லது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது அலைகள் எழும்போது படகுகள் உயருவதைப் போல, வளர்ச்சி அதிகரிக்கும்போது ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயரும் என்பது உலக வங்கி தெரிவிக்க விரும்பியக் கருத்து ஆகும்.

இயற்கை வளம் அதிகமுள்ள நாடுகளில் பலவும் 1970களிலும், கடந்த பத்தாண்டின் மத்தியிலும் அதிக வளர்ச்சியை எட்டின. இதற்கு காரணம் அந்த நாடுகளில் விளைக்கும் இயற்கை வளங்களின் விலை அதிகரித்தது தான். ஆனால், இந்த வளர்ச்சியின் காரணமாக அந்த நாட்டில் வறுமை குறைந்த விதம் திருப்திகரமாக இல்லை. உதாரணமாக, போஸ்த்துவானா நாடு கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டுக்கு சராசரியாக 7 விழுக்காடு வளர்ச்சியை எட்டி வருகிறது. ஆனாலும் அந்த நாட்டில் வறுமை ஒழியவில்லை. அந்த நாட்டு மக்களில் 21 விழுக்காட்டினர் இன்னும் கடுமையான வறுமையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதுமட்டுமின்றி உலகில் சமத்துவமின்மை அதிகமாக நிலவும் நாடுகளில் இதுவும் ஒன்றாகும். வளத்துறைகள் அனைத்தும் பொதுவாக அதிக முதலீடு கொண்ட வையாக இருக்கும். ஆனால், இத்துறைகளின் வளர்ச்சி வறுமை குறைப்பில் மிகச்சிறிய தாக்கத்தையே ஏற்படுத்தும்.

இது தொடர்பான அனுபவ அறிவை வைத்துப் பார்க்கும்போது, குறிப்பாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றுக்குள் நடத்தப்பட்ட அனுபவத்தின் அடிப்படையிலான ஆராய்ச்சியை வைத்துப் பார்க்கும்போது, இயற்கை வளம் அதிகமாக இல்லாத பணக்கார நாடுகளில் கூட அனைத்து வகையான வளர்ச்சிகளும் வறுமை குறைப்பில் அதே அளவிலான தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை (பார்க்க : அட்டவணை1).

வளர்ச்சி காரணமாக வறுமை எந்த அளவுக்கு குறையும் என்பது, பொருளாதார வளர்ச்சியின் தன்மையை தீர்மானிக்கும் பல்வேறு காரணி களைப் பொறுத்ததாகும். வளர்ச்சிக்கும் வறுமைக் குறைப்புக்கும் இடையிலான முக்கியமான காரணி வேலைவாய்ப்பு மற்றும் அதன் தீவிரத் தன்மை – தரம் ஆகும். இதனுடன் தொடர்பு கொண்ட இன்னொரு விஷயம் உற்பத்தித்திறன் வளர்ச்சி ஆகும். மற்ற இரண்டு காரணிகள்

அட்டவணை1: ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்புக்கு இடையிலான மாறுபாட்டு விதம்: சில உதாரணங்கள்

பொருளாதார வளர்ச்சி விகிதம்	அதிக வளர்ச்சி	வறுமைக்குறைப்பு விகிதம் மிதமான வளர்ச்சி	குறைந்த வளர்ச்சி
அதிக வளர்ச்சி	இந்தோனேஷியா (1970கள்; 1980கள்) மலேஷ்யா (1990கள்) உகாண்டா (1990கள்)	நவீன இந்தியா (1990கள்)	ஊரக இந்தியா 1990கள்) இந்தோனேஷியா (1990கள்)
மிதமான வளர்ச்சி	பொலிவியா	வங்கதேசம்	எத்தியோப்பியா (1990கள்) வங்கதேசம் (1995–2000) இந்தியா (1980கள்)

ஜோமோ குவாம்சுந்தரம், உதவித் தலைமை இயக்குனர், உணவு மற்றும் வேளாண் அமைப்பு ரோம்
அனீல் சவுத்ரி, இயக்குனர், ஆசியபசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணையம், பாங்காக்.

துறைகளின் தொகுப்பு அல்லது வளர்ச்சி மற்றும் சமத்துவமின்மையின் ஆதாரங்கள் ஆகும்.

வேலைவாய்ப்பின் தீவிரத்தன்மை: வேலையின் அளவு vs தரம்

வளர்ச்சி என்பது வேலைவாய்ப்பின் தீவிரத் தன்மை அல்லது வேலைவாய்ப்பு அதிகமுள்ள துறைகளில் நிகழும் வளர்ச்சி தான் வறுமை ஒழிப்புக்கு அதிக அளவில் பங்களிக்கின்றன என்று பொதுவாக நம்பப்படுகிறது. இவ்வாறாக வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புக்கு இடையிலான தொடர்பு குறித்த அனுபவ ஆராய்ச்சி என்பது வளர்ச்சி காரணமாக வேலைவாய்ப்பில் ஏற்படும் நெகிழ்வுத் தன்மையில்தான் அதிக கவனம் செலுத்துகிறது. அதாவது வளர்ச்சி ஒரு விழுக்காடு மாறினால், வேலைவாய்ப்பில் எத்தனை விழுக்காடு மாற்றம் ஏற்படும் என்பதில் கவனம் செலுத்துகிறது.

எனினும் இந்த அளவீடு மூன்று முக்கிய குறைகளைக் கொண்டிருக்கிறது. அவற்றில் முதலாவது, வேலைவாய்ப்பு உருவாக்கத்தின் உண்மையான அளவு குறித்து இதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒரு விழுக்காடு பொருளா தார வளர்ச்சியும், ஒரு விழுக்காடு வேலை வாய்ப்பு வளர்ச்சியும் அடையும் நாட்டிலும், 10 விழுக்காடு பொருளாதார வளர்ச்சியும், 10 விழுக்காடு வேலைவாய்ப்பு வளர்ச்சியும் அடை யும் நாட்டிலும் வேலைவாய்ப்பு நெகிழ்வுத் தன்மையும் அதே அளவுக்குத் தான் இருக்கும். இரண்டாவது மக்கள்தொகை அமைப்பில் ஏற்படும் மாற்றங்களை இது கருத்தில் கொள்ள வில்லை என்பதாகும். பல நேரங்களில் வேலை வாய்ப்பு வளர்ச்சியைவிட உழைக்கும் வயதில் உள்ள மக்கள் தொகையின் வளர்ச்சி மிகவும் அதிகமாக வளருவதால், வேலைவாய்ப்பில் ஏற்படும் வளர்ச்சி ஒட்டுமொத்த வறுமை விகிதத்தின் மீது மிகக் குறைந்த தாக்கத்தையே ஏற்படுத்துகிறது. மூன்றாவது, புதிதாக உருவாக்கப்படும் வேலைகளின் தரம் குறித்து வளர்ச்சியால் ஏற்படும் வேலைவாய்ப்பு நெகிழ்வுத் தன்மை எதையும் குறிப்பிடவில்லை. குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட துறைகளில் வேலை வாய்ப்பு அதிகரிப்பது உழைக்கும் ஏழைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கே வகை செய்யும்.

எனவே, வளர்ச்சியினால் ஏற்படும் வேலை வாய்ப்பு நெகிழ்வுத் தன்மை அதிகமாக இருப்பது வறுமை ஒழிப்புக்கு நல்லது என்று எவரும் கூறிவிட முடியாது. தொழிலாளர்களின் எண்ணிக்கை வளருவதைவிட வேலைவாய்ப்பு விதம் அதிகரித்து, அதன் காரணமாக ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு விதம் அதிகரிக்கிறதா என்பதைப் பொறுத்தே இதன் பயன் அமையும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் வேலைவாய்ப்பு அதிகரித்தாலும், அதைவிட அதிகமாக வேலைவாய்ப்பின்மையும் அதிகரிக்கும். இதனால் ஊதியமும், வருவாயும் குறையும்.

அதேபோல், வேலைவாய்ப்பு வளர்ச்சியால் வறுமை குறையுமா என்பதும் தரமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுவதைப் பொறுத்தே அமையும். வேலைவாய்ப்பு நெகிழ்வுத் தன்மை என்பது உற்பத்தித் திறனுடன் சம்பந்தப்பட்டதாகும். எனவே, வேலைவாய்ப்பு நெகிழ்வுத்தன்மையை அதிகரிப்பது என்பது, ஏற்கனவே குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட வேலைவாய்ப்புகளால் குறைந்துள்ள சராசரி உற்பத்தித்திறனை மேலும் குறைப்பதாகும். குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட வேலைகள் குறைந்த அளவிலான ஊதியத்தையே வழங்கும் என்பதால் அது மீண்டும் மீண்டும் குறைந்த உற்பத்தித்திறன், குறைந்த ஊதியம், வறுமை ஆகிய நீமைகள் நிறைந்த சுழற்சியையே ஏற்படுத்தும்.

குறைந்த அளவு உற்பத்தித்திறன் கொண்ட வேலைவாய்ப்புகளைக் கொண்டு முழு வேலை வாய்ப்பை எட்டினால் கூட இருக்கும் பணியா ளர்களை தக்க வைத்துக் கொள்வதற்கு பணியிட சூழலை வேலை வழங்குபவர்கள் மேம்படுத்த வேண்டும் என்று சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அனுபவங்கள் காட்டுகின்றன. தொழிலாளர்கள் சந்தை குறித்த இந்த ரீச்சர்டியன் கருத்து தியோ எொரிக்கல் கருத்தில்இருந்து மாறுபடுகிறது. இது பொருளாதார வளர்ச்சி என்ற கோணத்தில் பொருளாதார வல்லுனர் டபிள்யு. ஏ. லீவிஸ் என்பவரால் விளக்கப்பட் டிருக்கிறது. அதுமட்டுமின்றி, சில பணியாளர் களுக்காக பணியிடச் சூழலை மேம்படுத்தினால், அது தொழிலாளர்களை பிரபுக்களாக்குவது மட்டுமின்றி, உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை பெருக்குவதற்கு தேவையான தனியார் முதலீடுகள் குவிவதையும் தடுத்துவிடும் என்று தற்கால தத்துவங்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய இரு நிலைப்பாடுகளுக்கும் பொதுவான கருத்து என்னவென்றால், சமூக பாதுகாப்பு தளத்தின் மீது நாகரீகமான பணித் தளத்தை ஏற்படுத்துவதும்,

வீவிரின் மூலக் கருத்தில் கூறப்பட்டதைப் போன்று வாழ்க்கை நடத்துவதற்கான ஊதியத்தை உறுதி செய்வதும் ஆகும்.

இன்னொரு புறம் பார்த்தால், அதிவேக பொருளாதார வளர்ச்சி விதிகளின் காரணமாக உற்பத்தித் திறன் அதிகரிக்கும் போது, அதிக அளவில் வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்த முடியும். வேலைவாய்ப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கும் பகுதிகளில் வேலை இல்லாதவர்களும், குறுகிய குறைவான வேலைகளை செய்பவர்களும் பணியில் சேருவதை இது அனுமதிக்கிறது. இதனால், தொழிலாளர்கள் தங்களது நிறமைகளை அதிகரித்துக் கொள்வதற்காக முதலீடு செய்யவும், அதன்காரணமாக அதிக உற்பத்தி மற்றும் ஊதியமும் கொண்ட சுழற்சி ஏற்படவும் வாய்ப்பு உருவாகிறது. இவ்வாறாக, ஏழைத் தொழிலாளர்கள் தங்களது பழைய வேலைகளிலோ அல்லது நிறமைகளை அதிகரிப்பதன் மூலம் இடைக்கும் புதிய வேலைகளின் மூலமாகவோ அதிக உற்பத்தியை எட்டி, வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளமுடியும்.

துறைவாரி வளர்ச்சி – ஏழைகள் வாழ்வதும், உழைப்பதும் எங்கே?

எங்கு வளர்ச்சி ஏற்படுகிறது என்பது தான் வளர்ச்சிக்கும், வறுமைக்கும் இடையிலான தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய அம்சம் ஆகும். இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள் என்பதாலும், அதில் எண்ணிக்கையில் வேளாண் தொழிலை செய்கிறார்கள் என்பதாலும் அது அதிக தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கும் தொழிலாக கருதப்படுகிறது. எனவே, வேளாண் துறையில் ஏற்படும் வளர்ச்சி அதிகம் பேருக்கு வேலை அளிக்கும் என்றும், இது வறுமை ஒழிப்புக்கு மிகவும் நல்லது என்றும் நம்பப்படுகிறது.

எனினும், உற்பத்தித்திறன் தொடர்பாக ஏற்கனவே நடந்த விவாதம் இங்கு மிகவும் முக்கியமானதாகும். லத்தின் அமெரிக்க நாடுகளில் வேலைவாய்ப்பு அதிகமுள்ள வேளாண்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியால், வறுமை அதிகரித்திருக்கிறது என்று அந்த விவாதத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை, 1980களை உள்ளடக்கிய பத்தாண்டுகளை வீணாக இழந்தது. அதன்பின்னர் அமைப்பு மாற்றங்கள் மற்றும் தாளாரமயமாக்கல் கொள்கைகள் ஆகியவற்றின் காரணமாக பொருளாதாரம் அதிவேக வளர்ச்சி அடைந்ததையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். வாழ்வாதாரத்திற்கான மாற்றுவழிகள் இல்லாத நிலையில், அனைவரும் வேளாண்துறை வேலைக்கு மாறினார்கள். இவர்களில் பலர் தகுதிக்கு குறைந்த வேலைகளைச் செய்தனர். பொதுவாகவே, குறைந்த வேகத்தில் வளர்ச்சி அடையும் வேளாண்துறையில் இவ்வளவு பேர் பணியாற்றியதால் வேளாண் உற்பத்தி வளர்ச்சி அடையாமல் தேக்கமடைந்தது. சில நேரங்களில் இத்துறையில் சராசரி வருமானமும் குறைந்தது. எனவே, ஒரு துறையில் அதிக பணியாளர்கள் பணியாற்றுவது என்பது உற்பத்தி மற்றும் வருவாயை குறைப்பதாகும். வேளாண் துறையில் அதிக வேலைவாய்ப்பு இடைத்தால் அது வேளாண் உற்பத்தி அதிகரிப்பை குறைக்கும் என்பதே இதன் பொருளாகும்.

அதுமட்டுமின்றி, 2006 ஆம் ஆண்டு வரையிலான ஐம்பதாண்டுகளில் முக்கிய உணவு தானியங்களின் உற்பத்தித்திறனும், உற்பத்தியும் அதிகரித்ததால் உணவுப் பொருட்களின் விலைகள் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்தன. இதையே வேறு வார்த்தைகளில் குறிப்பிடவேண்டுமானால், வேளாண்துறை உற்பத்தி அதிகரிப்பு துல்லியமான செலவுகளை குறைத்ததுடன், விவசாயிகள் மற்றும் வேளாண் இடுபொருட்களை அளித்த வர்களுக்கான வாய்ப்புகளும் அதிகரித்திருக்கிறது.

இந்தியாவில் உள்ள ஏழைகளில் நான்கில் மூன்று பங்கினர் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருவதாலும், நகர்ப்புறங்களில் ஏழைகளாக இருப்பவர்கள் கிராமப்புறங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் என்பதாலும், கிராமப்புற ஏழைகளின், குறிப்பாக சிறு விவசாயிகள் மற்றும் கூலித்தொழிலாளிகளின் வருமானத்தை அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். விவசாயத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை உலக அளவில் உயரப்போவதில்லை. ஆனால், கிராமப்புறங்களில் தோட்டங்களைத் தாண்டி மற்ற வேளாண்மை சார்ந்த பணிகளிலும், மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் பதனத் தொழில்களிலும் மக்கள் ஈடுபடுவதற்கான சூழல் போதிய அளவு ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, எத்தெந்த நாடுகளில் எல்லாம் வேளாண் உற்பத்தி குறைவாக இருக்கிறதோ,

அங்கெல்லாம் வேளாண் தொழிலில் வேலை வாய்ப்பு சார்ந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பதிலாக, உற்பத்தி சார்ந்த வளர்ச்சியை ஏற்படுத்து வதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய நிலை ஏற்படுத்த வேண்டுமானால், வேளாண் தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு விரிவாக்கச் சேவைகள், வேளாண் தொழிலாளர்களின் திறன் மேம்பாடு ஆகியவற்றுக்காக அதிக அளவில் முதலீடு செய்யப்பட வேண்டும். வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை வேளாண்மை சாராத அதிக உற்பத்திக் கொண்ட தொழில்களுக்கு மாற்றுவதன் மூலம் வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதுடன் வறுமை ஒழிப்பிலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

அமைப்பு மாற்றங்களை உற்பத்தித்திறன் வரிவுபடுத்துகிறது

வறுமை ஒழிப்புக்கு உற்பத்தித்திறன் அதிகரிப்பு மிகவும் அவசியம் என்ற போதிலும் இந்த இரண்டுக்கும் இடையிலான உறவு நாம் நினைப்பதைவிட மிகவும் சிக்கலானதாகும். உற்பத்தித்திறன் அதிகரிப்பு உற்பத்தியாளர்களின் வருவாயை அதிகரிக்கும் என்று கருதுவது தவறாகும். இருபதாவது நூற்றாண்டில் வேளாண்துறை உற்பத்தித் திறன் அதிகரிப்பு உணவு மற்றும் பிற வேளாண் பொருட்களின் விலையை குறைக்க உதவி செய்திருக்கிறது என்பது வரலாற்று ரீதியாக நிருபிக்கப்பட்ட ஒன்றாகும்.

அதிக அளவில் வேளாண் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள், அவர்களுக்கான ஊதிய நிபந்தனைகளின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்ட உற்பத்தியில் ஒரு சிறு பகுதியை மட்டுமே பெருகின்றனர். சுதந்திரமான சிறு விவசாயின் தங்களின் உற்பத்தி, இடுபொருட்கள் மற்றும் கடன் வழங்குபவர்கள் ஆகியோருடனான உறவு சமச்சீரற்ற வகையில் இருப்பதாக உணர்வார்கள். எனவே, உற்பத்தித் திறன் அதிகரிப்பு உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கும் அதே நேரத்தில், உற்பத்தி அதிகரிப்பால் உற்பத்தியாளருக்கு உண்மையாக எவ்வளவு பயன் கிடைக்கும் என்பதை அவர்களின் சந்தர்ப்ப சூழல் தான் தீர்மானிக்கும்.

மிழக்கு மற்றும் தென்மிழக்கு ஆசியாவில் வளர்ச்சியின் தொடக்க கட்டங்களில், தொழி வாளர்கள் அதிகமுள்ள உற்பத்தித்துறை வேகமாக வளர்ச்சியடைந்ததால் வறுமை குறைந்தது. லத்தின் அமெரிக்க நாடுகளிலும் இதேபோல் தொழிலாளர்கள் நிறைந்த உற்பத்தித்துறை வளர்ச்சியால் வறுமை குறைந்தது. உற்பத்தித் துறையும், அதிக நிறன் கொண்ட சேவைகளும் விரிவடையும் போது, வேளாண் துறையில் கூடுதலாக உள்ள பணியாளர்கள் உற்பத்தித் துறைக்கு ஈர்க்கப்படுவதுடன், வேளாண் துறையிலும் உற்பத்தியாளர்கள் எண்ணிக்கை குறைந்து வளர்ச்சி ஏற்படுகிறது. இத்தகைய அமைப்பு மாற்றங்களும் வறுமையை குறைக்கின்றன.

எனினும், 1990 முதல் இந்தோனேஷியா பெற்ற அனுபவம் வேறுமாறியாக உள்ளது. கிராமப் புறங்களில் கடுதலாக உள்ள தொழிலாளர்களை அதிக உற்பத்தித்திறன் கொண்ட துறைகளுக்கு ஈர்ப்பதற்கான வாய்ப்புகள் குறையும்போது வறுமையை குறைப்பதில் உற்பத்தித்துறை வளர்ச்சியின் தாக்கம் குறைந்து என்பது தான் இந்தோனேஷிய அனுபவம் சொல்லும் உண்மையாகும். எனவே, எந்தத் துறைகள் நல்ல அல்லது கெட்ட வேலைகளை வழங்குகின்றன என்பதை முன்கூட்டியே யூகிப்பது தவறாக வழி நடத்திச் செல்லக்கூடியதாகும். நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் அதிக உற்பத்தித்திறன் கொண்ட உற்பத்தித்துறை பணிகளுக்கும், குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட உற்பத்தித்துறை பணிகளுக்கும் இடையிலான வகைப்பாடுகள் அடிக்கடி மாறுவது தான் இதற்கு காரணமாகும். இத்தகைய நாடுகளில் வறுமையை குறைக்க அதிக உற்பத்தித் திறன் கொண்ட உற்பத்தித் துறையை உருவாக்கும் வகையில் தொழில்துறையை சீரமைப்பது தான் ஒரே வழியாகும்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், அனைத்து வளர்ச்சிகளுமே வறுமை ஒழிப்பில் ஒரே மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. வறுமைக் குறைப்பில் வளர்ச்சியின் தாக்கம் எத்தகையதாக இருக்கும் என்பது அதன் வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தியின் ஈவிரத் தன்மையையும், குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட துறைகளில் இருந்து அதிக உற்பத் தித்திறன் கொண்ட துறைகளுக்கு எந்த அளவில் மாற்றம் ஏற்படுகிறது என்பதையும் பொறுத்ததாகும். உண்மையில் அதிக உற்பத்தி திறன் கொண்ட நடவடிக்கைகள் விரிவடையாத பட்சத்தில் இந்த

Written by Administrator
Friday, 01 November 2013 00:00 -

அட்டவணை 2:

வேலைவாய்ப்பு அதிகமுள்ள, உற்பத்தி அதிகமுள்ள வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பு

வேலைத் தன்மைகள்	வேலைவாய்ப்பு அதிகமுள்ள வளர்ச்சி	உற்பத்தி அதிகமுள்ள வளர்ச்சி
அதிக உற்பத்தி	வறுமைக் குறைப்புடன் சாதகமான தொடர்பு	வறுமைக் குறைப்புடன் சாதகமான தொடர்பு
குறைந்த உற்பத்தி	வறுமைக் குறைப்புடன் நடுநிலை / சாதகமான தொடர்பு	வறுமைக் குறைப்புடன் சாதகமான தொடர்பு

மாற்றம் ஏற்படாது. இல்லாவிட்டால், கிராமப் புறங்களில் உள்ள ஏழைகள் நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்ந்து, அதனால் நகர்ப்புறங்களில் குறைந்த வருவாய்ப் பிரிவினரின் எண்ணிக்கையும், நகர்ப்புற அமைப்பு சாராத் துறைகளில் பணி யாற்றுவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். *(பார்க்க அட்டவணை 2)*

வளர்ச்சியின் போக்குகள் – சுவலையளிக்கும் சமத்துவமின்மை

வறுமையை குறைப்பதற்கான வளர்ச்சியின் தாக்கத்தில் மிகவும் முக்கியமான காரணி சமத்துவமின்மை தான் என்பதை மேலே குறிப் பிடப்பட்ட போஸ்த்வானா நாட்டு உதாரணம் விளக்குகிறது. இத்தகைய அதிக முதலீடு கொண்ட துறைகளில் ஏற்படும் வளர்ச்சி சமத்துவமின்மையை அதிகரிக்கின்றன. இதனால் இவற்றால் வறுமையை குறைப்பதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. மிழக்கு ஆசியாவில் வளர்ச்சியின் தொடக்க கட்டத்தில் சமத்துவமின்மை வேகமாக குறைத்தது தான் வறுமையை ஒழிப்பதற்கு பெரிதும் உதவியது. மேலும், தொழிலாளர்கள் நிலைத்த உற்பத்தித்துறை வேகமாக விரிவடைந்தும், நிலச் சீர்திருத்தங்களும் தான் தென் கொரியா, தைவான் போன்ற மிழக்காசிய நாடுகளில் சமத்துவமான வளர்ச்சி ஏற்படவும், அதன் மூலம் வறுமை வேகமாக குறையவும் உதவி செய்தன.

மிழக்காசியாவில் கடுமையான வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை 1970 ஆம் ஆண்டில் 40 கோடியாக இருந்தது. 1990 ஆம் ஆண்டில் இது 18 கோடியாக அதிகரித்தது. இடைப்பட்ட காலத்தில் இப்பகுதியின் மக்கள் தொகை 42.5 கோடி அதிகரித்தது. 1975 ஆம் ஆண்டிற்கும், 1995 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் மிழக்காசியாவில் வறுமை மூன்றில் இரண்டு பங்கு குறைந்தது என்று உலக வங்கி மதிப்பிடு செய்திருக்கிறது. 1975 ஆம் ஆண்டில் தென் மிழக்கு ஆசியாவில் 60% ஆக இருந்த வறுமை 1995 ஆம் ஆண்டில் 20% ஆக குறைத்தது தான் இதற்கு காரணம் ஆகும்.

ஒரு நாட்டின் வளர்ச்சி விதம் ஏழைகளின் வருமானத்தை விட பணக்காரர்களின் வருமானத்தை அதிகமாக உயர்த்தும் வகையில் இருந்தால், அதனால் வறுமைக் குறைப்பில் ஏற்படும் தாக்கம் மிகவும் குறைவாக இருக்கும். சமத்துவமின்மை அதிகரிக்கும்போது, அது வறுமையை குறைப்பதற்கு அதிவேக வளர்ச்சியின் பங்களிப்பை குறைத்து விடும். மாறாக, வளர்ச்சி சமமாக இருக்கும்போது அது குறைவாகவும், குறுகியதாகவும் இருந்தால் கூட வறுமையை குறைக்க உதவும்.

எனவே, பல்வேறு நடைமுறைகள், தாக்கங்கள், விளைவுகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த முடிவு தான் வறுமை குறைப்பை தீர்மானிக்கும். சீனாவில், சமத்துவமின்மை வேகமாக அதிகரித்த போதிலும், உற்பத்தி வளர்ச்சியும், வேலைவாய்ப்பு வளர்ச்சியும் அதிகமாக இருந்ததால் அங்கு வறுமை குறைந்தது. அதேபோல் தென் அமெரிக்காவில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து வறுமை வேகமாக குறைந்தது. 1998லிலிருந்து தொடங்கி 11 ஆண்டுகளுக்கு வளர்ச்சி விதம் மிழக்கு ஆசியாவை விட மிகவும் குறைவாக இருந்தாலும், அதற்குப் பிறகும்

வளர்ச்சி சீராக இல்லாவிட்டாலும் சமத்துவ மின்மை குறைந்ததால் வறுமையும் குறிப்பிடத்தக்க அளவில் சரிந்தது.

இந்த இடத்தில் "வளர்ச்சியின் வறுமை ஒழிப்பு நெகிழ்வுத் தன்மை" குறித்து அறிமுகம் செய்வது பயனுள்ளதாக இருக்கும். ஒரு விழுக்காடு வளர்ச்சியால் X விழுக்காடு வறுமைக் குறையும் என்பது தொடர்பானது தான் இந்த தத்துவம் ஆகும். சமத்துவமின்மை எந்த அளவுக்கு உள்ளது என்பதைப் பொறுத்துதான் வளர்ச்சியின் வறுமை ஒழிப்பு நெகிழ்வுத் தன்மை அமைவும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒரு விழுக்காடு வளர்ச்சியுடன், ஒரு விழுக்காடு சமத்துவமின்மை குறைக்கப்பட்டால் அது X விழுக்காட்டிற்கும் கூடுதலாக வறுமையை குறைக்கும். அதாவது வளர்ச்சி – வறுமைக் கோடுகள் மிகவும் சரிவான வையாகவோ, இணையானதாகவோ அல்லது மேற்நோக்கி சரிவதாகவோ இருக்கலாம்.

இவற்றில் எந்த விளைவு ஆதிக்கம் செலுத்துகிறது என்பது சந்தர்ப்ப சூழல்களை சார்ந்த அனுபவம் சார்ந்த ஒன்றாகும். ஆனால், எது எப்படி இருந்தாலும், சமத்துவமின்மை குறைவும், பொருளாதார வளர்ச்சியும் ஒன்றாக நிகழுமபோது வறுமை அளவு குறையும் என்பது உறுதி யானதாகும்.

வறுமைக்குறைப்புக்கு வளர்ச்சி மிகவும் அவசியம் என்று அடிக்கடி கூறப்படுகிறது. மறுவினியோகம் தவிர்க்கப்பட்ட நிலையில் தான் இது சாத்தியம் என்பதுதான் பரேட்டோ தத்துவத்தின் அடிப்படையாகும். ஆனால், அத்தகைய சூழலிலும், வறுமையை குறைக்க வளர்ச்சி மட்டுமே போதுமானதல்ல. வளர்ச்சியின் போக்கு வளர்ச்சியின் ஆதாரங்கள், வளர்ச்சியின் பயன்கள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றன ஆகியவை தான் வறுமை ஒழிப்புக்கு மிகவும் முக்கியமாகும். வேலைவாய்ப்பு, உற்பத்தித்திறன், அமைப்பு மாற்றம் ஆகியவையும் வறுமைக் குறைப்பு மீதான வளர்ச்சியின் தாக்கத்தில் முக்கிய பங்காற்றுகின்றன.

பொருளாதாரத்தின் ஒரு துறையில் ஏற்படும் வளர்ச்சி தானாக வறுமையை குறைத்து விடாது. வேலைவாய்ப்பு, உற்பத்தித்திறன், வளர்ச்சியின் நீடித்த தன்மை ஆகியவற்றைச் சார்ந்தே வறுமைக் குறைப்பு அமையும். அதிக உற்பத்தி கொண்ட துறைகளில் வேலைவாய்ப்பு சார்ந்த வளர்ச்சி எட்டப்பட்டால் அது வறுமையை குறைக்கும். மாறாக அதிக உற்பத்தி வளர்ச்சி தேவைப்படும் குறைந்த உற்பத்தி துறைகளில் வேலைவாய்ப்பு சார்ந்த வளர்ச்சி எட்டப்பட்டால் அது வறுமையை அதிகரிக்கும். இவ்வாறாக, ஏழை மக்கள் எந்தத் துறைகளில் வேலை செய்கிறார்கள்; எந்தத் துறைகளுக்கு மாறுகிறார்கள் என்பனவையும் இதில் மிகவும் முக்கியமாகும். அதேநேரத்தில் குறைந்த உற்பத்தித்துறையில் உள்ள தொழி லாளர்கள் அதிக உற்பத்தித் துறைக்கு மாறுவதும் அவசியமாகும். இதற்கு தொழிலாளர்களின் திறனை அதிகரிக்க அதிக அளவில் முதலீடு செய்யப்பட வேண்டியதும், அதிக உற்பத்தி கொண்ட துறைகள் விரிவு படுத்தப்பட வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

உற்பத்தித்திறனை அதிகரிக்கக்கூடிய வேலை வாய்ப்பு வளர்ச்சியின் மூலம் தான் வறுமையை குறைப்பதற்கான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டை நியாயமான கழுற்சி ஏற்படும். வறுமை குறையும் போது உற்பத்தி அதிகரித்து அதனால் ஊதியம் உயரும் நிலை உருவாகும். இதன்மூலம் தொழிலாளர்களின் இறள் மேம்பாட்டிற்காக முதலீடு செய்யும் வாய்ப்பு பிடைக்கும். இது இன்னும் அதிக பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்யும்.

வளர்ச்சிக்கும், வறுமைக்கும் இடையிலான உறவில் இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால் சமத்துவமின்மை ஆகும். சமத்துவமின்மையை அதிகரிக்கும் வளர்ச்சி யைவிட, பணக்காரர்களைத் தாண்டி ஏழைகளுக்கு அதிக பயனளிக்கும் வளர்ச்சி தான் வறுமையை குறைக்கும்.

வறுமை குறைப்புடன் சம்பந்தப்பட்ட இந்த காரணிகளுக்கு உள்ள முக்கியத்துவத்தை வைத்துப் பார்க்கும்போது, வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பில் பல வகையான அனுபவங்களை காண வாய்ப்பிருக்கிறது. அதிக வளர்ச்சி விகி தத்தால் குறைவான அல்லது மிதமான வறுமைக் குறைவு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதை போல, மிழக்கு மற்றும் தென்மிழக்கு ஆசியாவில் அமைத்ததைப் போன்று போறிய அளவு வேலை வாய்ப்பை பெருக்கும் தன்மையுடன் குறைந்த அளவு வளர்ச்சி எட்டப்பட்டால் கூட அதிவேக வறுமைக் குறைப்பை ஏற்படுத்த முடியும். ●